உ
சிவமயம்



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
முதலாவது குருமஹா சந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த

# பரமாசார்ய சுவாமிகள்

30-வது குருபூசைத் தினத்தை
முன்னிட்டு வெளியிடப்பட்டது.

**10-04-2011**

வெளியீடு :

## சைவ சமய அருள்நெறி மன்றம்

வலி கிழக்கு.

வீரபத்திரர் கோவிலடி, கோப்பாய்.

பதிவு இல. : H.A. / 04 / JA / 299 ஆரம்பம் : 28-09-2009

# நற்றமிழ் வளர்த்துச் சைவம் தழைத்தோங்கச் செய்திடும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரங்கருணைத் தடங்கடலான பரமேஸ்வரன் பெற்ற பாலன் ஸ்ரீ முருகன் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு யாழ்பாடிப் பரிசு பெற்ற யாழ்ப்பாணத்தின் நல்லூர்ப் பதியிலே கோயில் கொண்டெழுந்தருளி திருவருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். இந்த நல்லவர் வாழும் நற்றிருப்பதியின் அருகிலே அமைந்துள்ள புனிதமிகு ஆதீனம்தான் **"நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்".**

மங்களகரமான மாண்புமிகு இலங்கையிலே மகிமை பெற்று விளங்கும் ஒரேயொரு ஆதீனம் இந்த நல்லை ஆதீனமே. சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தம்மையே முற்றுமுழுதாக அர்ப்பணித்த ஆறுமுகநாவலர் போலத் தொண்டையினாலேயே தொண்டாற்றி கதாப்பிரசங்கம் மூலம் கவின்மிகு பணிசெய்த பெருந்தகைதான் முதலாவது குருமஹா சந்நிதானமான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள். இவரது இடைவிடாத முயற்சியினாலேயே 1966-ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பெற்ற இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இன்று புகழ்பூத்த ஓர் ஆதீனமாக நல்ல கீர்த்தியுடன் விளங்குகின்றது.

இந்தியாவிலே சைவமும் தமிழும் வளர்க்கும் ஆதீனங்கள் போன்று இலங்கையிலும் ஓர் ஆதீனம் நிறுவவேண்டுமென்று அளப்பரிய விருப்பினால் இந்த யாழ்ப்பாணத்தின் மண்ணிலே நல்லையம்பதிலே சைவத்தமிழ் வளரப் பாடுபட்ட முதலாவது குருமஹா சந்நிதானம் அமைத்த இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இன்று பல பணிசெய்யும் ஒரு நிறுவனமாகத் தலை நிமிர்ந்து நிற்கின்றது. வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன் சிவபெருமான் மகன் சிவமைந்தன் முருகப்பெருமான் வழிபடும் அடியார்கள் வளமுடன் வாழத் திருவருள்பாலிக்கும் இந்த நல்லையம்பதி ஒரு புனிதமான இடமாகும். இந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் மேற்குத் திருவீதியிலே அழகுடன் மிளிரும் இந்த ஆதீனம் கிழக்கு நோக்கிய குருமூர்த்த ஆலயத்தையும் வடக்கு நோக்கிய அழகான கலா மண்டபத்தையும் உடையது.

இந்த நல்லை ஆதீன ஸ்தாபகரான பூர்வாச்சிரமத்தில் சி. எஸ். எஸ். மணிபாகவதர் என்றழைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த

பரமாசார்ய சுவாமிகள் ஈழத்திலே மட்டுமன்றி இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, லண்டன் முதலாய இடங்களுக்கும் சென்று கதாப்பிரசங்கம் செய்து சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்க்க அரும்பாடுபட்டார். இவரது சாரீரம் மிகவும் இனிமையானது. கதை சொல்லச் சொல்லக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். அவர் கதையைச் சொல்லும்போது கண்ணுக்கு முன்னால் நடப்பது போன்று மனக் கண்களிலே ஒவ்வொரு காட்சியும் படம் பிடித்தாற் போலச் சுலபமாக விளங்கிவிடும். இந்த மாதிரிக் கதை சொல்லும் திறமை வேறு யாருக்குமே வராது. அத்தனை தத்ரூபமாகக் கதை சொல்வதில் இவருக்கு நிகர் இவரே !

இவ்வளவு சிறப்பம்சம் கொண்ட நல்லை ஆதீன ஸ்தாபகர் ஒரு வணக்கத்திற்குரிய சுவாமிகளாக, நடமாடும் தெய்வமாகக் காணப்பட்டார். பார்த்த மாத்திரத்திலேயே ஒரு தெய்வீகக் களை இருக்கும். அவரது முகத்திலுள்ள கண்களில் ஓர் ஈர்ப்புச் சக்தி இருக்கும். காந்தசக்தி பாய்கின்றது போல ஓருணர்வு. அவர்களுடைய உருவத்திலே காணப்படுகின்ற ஒரு வசீகரம் வேறு ஒருவருக்குமில்லை. அவருடன் கோபித்துப் பேசவேண்டும் என எண்ணிக்கொண்டு ஆவேசத்துடன் வருபவர்கள் அவரின் முன்னால் வந்தவுடனேயே பெட்டிப் பாம்பாக அடங்கிவிடுவார்கள். கோபத்தோடு வந்தவர் சுவாமிகளுக்கு முன்னே நிற்கவும் முடியாமல் கூனிக் குறுகிக்கொண்டு "சரி, சரி நான் வருகின்றேன் சுவாமி ! ஏதாவது பிழையாக நான் பேசியிருந்தால் தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றபடி அந்த இடத்தைவிட்டு நகர்ந்து விடுவார்கள்.

இத்தனைக்கும் காரணம் சுவாமிகள் நல்லையில் வீற்றிருக்கின்ற கந்தப்பெருமான்மீது கொண்டிருந்த அளவற்ற பக்தியும் விசுவாசமுமே யாகும். "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்பதற்கிணங்க நல்லை ஆதீன முதலாவது குருமஹா சந்நிதானம் அவர்கள் நல்லூர் முருகன்மீது முற்றுமுழுதான நம்பிக்கையும் பக்தியும் வைத்திருந்ததனால் என்ன என்ன காரியங்களை எப்படி எப்படிச் செய்யவேண்டுமோ அப்படி அப்படியெல்லாம் செய்து பயன்மிகு பணிகளைப் பக்குவமாகச் செய்துகொண்டு வந்தார்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அதிகாலை ஐந்து மணியளவில் நல்லூர் முருகன் கோயில் சுற்றாடலில் வீதி பஜனை நடத்தினார். சின்னஞ்சிறு பாலகர்களும் இளவயதினரும் மற்றும் பெரியோர்களும் இவரது பஜனையில் பங்குகொண்டு ஆன்ம ஈடேற்றம் கண்டனர் எனக் கூறின் மிகையாகாது.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நல்லை ஆதீனத்திலேயே தேவாரத் திருமுறைகளை முறையாக ஓதுவதற்குப் பயிற்றுவிக்கும் பண்ணிசை வகுப்புக்களும், மாணவ மாணவிகளிடையே அவரவர் கற்றலுக்கு ஏற்ற விதத்திலே கலைபயில் பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பெற்றன. அதன் பயனாக சங்கீதம், வயலின், மிருதங்கம், வீணை என்பனவற்றைக் கற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு வசதிகளும் வாய்ப்புக்களும் செய்து கொடுக்கப்பட்டன. அதுமாத்திரமன்றி மாணவர்கள் கல்வியில் முன்னேற்றங் கண்டு தமது வாழ்க்கையை வளம்படுத்தி வளர்ச்சியுறுவதற்கு அவ்வப்போது நல்ல பயன்தரத்தக்க ஆலோசனை களும், வழிநடத்தல்களுங்கூட இந்த ஆதீனத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கற்விகற்கும் மாணவர்கள் குறிப்புக்கள் எழுதி வைத்துக்கொள்வதற்கு வசதியாக கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இது எல்லாவற்றிற்கும் மேலாக தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனை வழிபட வரும் அடியார்களுக்கு மதியவேளை உணவு வழங்குதல் வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு திருவிழாக் காலத்தில் அன்னதானமும் வழங்கப்பெற்றது. இப்படி ஆதீனத்தில் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டால் நாட்டு மக்கள் பயன்பெறுவார்கள் என்று ஒவ்வொன்றையும் சிந்தித்துச் செயலாற்றும் திறன்கொண்ட சுவாமிகள் ஆலய விழாக்களிலும் மற்றும் பொது வைபவங்களிலும் பங்கேற்று அறிவுரைகளையும் நல்ல பயன்மிகு தத்துவங்களையும், நயக்கத்தக்க நல்ல கதைகளையும் எடுத்துச் சொல்லி இலகு நடையில் எல்லோருக்கும் விளக்கி வந்தமை ஒருபெருந் தொண்டாகும்.

சைவமக்கள் ஒவ்வொருவரும் உண்மைச் சைவர்களாகவே வாழ்தல் வேண்டும் என்ற பெருநோக்குடன் சமய தீட்சையும் வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றி சைவ ஆசாரத்துடன் வாழ்வதற்காக தீட்சை வைக்கும் முறைகளை விளக்கி நித்திய கரும விதிகள் புத்தகமாகவும் வழங்கப்பட்டன. அத்துடன் சுவாமிகள் தம்மையே ஆசிரியராகக்கொண்டு **"அருளமுதம்"** என்ற பெயரோடு ஒரு சஞ்சிகையையும் மாதந்தோறும் வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இச் சஞ்சிகையில் பயன்தரு சமயக் கட்டுரைகளும், கவிதைகளும், தேவாரங்களும் அதற்கான விளக்கங்களும் வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்று ஆதரவையும் பெற்றுக்கொண்டதால் நல்லை ஆதீனம் பெருமையுடனும் புகழோடும் விளங்கலாயிற்று.

மேலும்,

சுவாமிகள் பங்கேற்கும் நிகழ்வுபற்றிய குறிப்புக்களும், சைவமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கக் குறிப்புக்களும், விழாக்கள் - விரதங்கள் - பண்டிகைகள் - கொண்டாட்டங்கள் எவ்வாறு கைக்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றிய முறையான தகவல்களும் இந்த அருளமுதம் சஞ்சிகையிலே வெளிவந்ததால் பலரும் இந்தச் சஞ்சிகையை வாங்கிப் படிக்க ஆரம்பித்தனர். குறைந்த விலையில் நிறைந்த கருத்துக்களுடன் பிரசுரமாகிய இந்த ஆதீன சுவாமிகளின் "அருளமுதம்" குறிப்பாக யாழ்ப்பாண மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டியதோடு நல்ல வரவேற்பையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சைவமும் தமிழும் வளர முழுமூச்சுடன் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணித்துச் செயற்பட்ட சுவாமிகள் தம்முடைய ஆதீனத்திலே சைவ சித்தாந்த பண்டிதர் தேர்வுக்காகவும், சைவப்புலவர் தேர்வுக்காகவும் மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்றுச் சிறப்புப் பெறவேண்டுமென்ற நோக்கில் சைவசித்தாந்த வகுப்புக்களையும் ஆரம்பித்து அது தொடர்ந்து நடைபெறுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

இலங்கையில் வாழும் சைவமக்கள் ஒவ்வொருவரும் எங்களது நாயன்மார்கள் அருளிச்செய்த தேவாரத் திருமுறைகளைப் படிக்கவேண்டும் என்ற உயர்நோக்கில் சுவாமிகள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன வெளியீடாக திருமுறைப் பதிக நூல்களையும் அச்சேற்றி வெளியிட்டு வைத்தார். சைவசமய அரும் பொக்கிஷமான தேவாரம் பண்ணோடு பிழையின்றிப் பாட வேண்டுமென்ற கொள்கையுடைய சுவாமிகள் தாமாகவே பண்ணிசை வகுப்புக்களை ஆரம்பித்து, வேலைப் பழுவையும் பார்க்காமல் படிக்க வருகின்ற பிள்ளைகளுக்குத் தாமே ஆசிரியராகவும் இருந்து தேவாரத் திருப்பதிகங்களை முறையாகப் பயிற்றுவித்த பெருமை இவரையே சாரும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுவாமிகளின் கதாப்பிரசங்கம் இடம்பெறாத ஆலயங்களே இல்லையென்று சொல்லுமளவுக்கு யாழ்ப்பாணத்தின் எல்லா இடங்களிலும் மூலை முடுக்குகளில் அமைந்துள்ள ஆலயங்களிலும் இவரது கதாப்பிரசங்கம் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தம்முடைய தொண்டையி னாலேயே தொண்டாற்றிச் சைவத்தையும் தமிழையும் பேணி வளர்த்து அரும்பணியாற்றிய ஆதீன முதல்வர் தாம் நிறுவிய நல்லை

திருஞானசம்பந்தர் ஆதீனமானது துரிதகதியில் வளர்ச்சியுற்று தேசமெங்கும் புகழ்பரப்பி நல்ல கீர்த்தியுடன் விளங்கவேண்டுமென்ற வேணவாவினால் சைவ சமயத்தை அனுட்டிக்கின்ற அடியார் பெருமக்கள் பலவகையிலும் முன்னேற்றமடைந்து கல்வி, செல்வம் முதலியவற்றில் சிறந்து விளங்கி பரிணாம வளர்ச்சியடைய வேண்டுமென மிகவும் கஷ்டப்பட்டு உழைத்தார்.

பெரியார்கள், சான்றோர்கள், நாயன்மார்கள் ஆகியோரின் குருபூசைத் தினங்களையும் நல்ல முறையில் அனுஷ்டித்து அவர்களது கதைகளையும் கதாப்பிரசங்கமாகச் செய்து அரும்பணியாற்றிய ஆதீன ஸ்தாபகர் அவர்கள் எப்போதும் புன்சிரிப்புத் தவழும் முகத்துடன் காந்தசக்தி வாய்ந்த கண்களுடன் சைவப் பழமாகவே காட்சிதரும் தெய்வீக அழகின் தன்மை சொல்லில் அடங்காது.

இங்ஙனம் பல்வேறு விதங்களில் தொண்டாற்றிய சுவாமிகள் தெய்வீகமான சமாதி அடையும் நாளும் வந்து சேர்ந்தது. கதாப்பிரசங்கம் செய்வதையே தொண்டாகக் கருதிச் செயற்பட்ட ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் யாழ்ப்பாணம் - வண்ணை, ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயில்) ஆலயத்தில் திருவிழா நடைபெற்றவேளை (1981) கதாப்பிரசங்கம் நிகழ்த்திவிட்டு இரவு நேரம் ஆதீனம் திரும்பிக் கொண்டிருந்தவேளை திடீரென்று உடல் சுகவீன முற்றுச் சற்று நிலை தளர்ந்தார். அப்போது நல்லைக் கந்தப்பெருமா னுடைய நாமத்தை உச்சரித்த வண்ணம் அமைதியாக இருந்து சைவ உலகமே கதறிக் கண்ணீர் மல்க, ஆதீன குருகுலத்தவர் தயங்கித் தயங்கி அழுதவண்ணம் அரற்றிக் கதறி நிற்க, சைவமும் தமிழும் வளரப் பாடுபட்ட ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் பூதவுடல் நீத்துப் புகழுடம்பைப் பெற்றுக்கொண்டார். இது நிகழ்ந்தது 11-04-1981 அன்று இரவாகும். எல்லோரும் ஏங்கித் தவிக்க, சுவாமிகள் எல்லாம்வல்ல தொல்லை வினைதீர்க்கும் கந்தப்பெருமானின் திவ்ய பாதத் திருக்கமலத்தைச் சென்றடைந்தார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் அன்றும் இன்றும் செயற்பட்டு நிற்கின்றது. இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமானது இலங்கை மண்ணில் பெருமையுடன் விளங்குகின்ற ஒரேயொரு நிறுவனமாகும். இந்த நல்லை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தமது சமயப் பணியைத் தொடர்ந்து செய்வதற்கும், தம்முடைய

ஸ்தானத்துக்கும் ஒரு பொறுப்பான - தகுதிவாய்ந்த - அறிவாற்றல்மிக்க - பேச்சுவன்மையும் வசீகரமுமுள்ள ஒருவரை ஆதீன இளவரசு என்னும் ரீதியில் நியமனம் செய்திருந்தார். அவர்தான் இப்போது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானமாகத் திகழ்கின்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளாவார்.

இவரது அளப்பரிய சேவையால் இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் தற்போது ஒரு சிறப்பம்சம் பொருந்திய சைவச் சான்றோர்கள் பலவகையிலும் போற்றிப் புகழக்கூடிய வகையில் சேவையின் இருகப்பிடமாகத் திகழ்கின்றது.

யாழ். குடாநாட்டில் நடைபெறுகின்ற ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகளிலும் மற்றும் ஆலய விழாக்களிலும் விசேஷ பைவங்களிலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் இந்த இரண்டாவது குருமஹா சந்நிதானம் அவர்கள் தமது அருளாசியுரையை நல்ல முறையில் தெளிவுடன் ஐயந்திரிபறக் கூறி வழங்கி வருவதனால் இவரது பணி ஒரு பிரதான அம்சமாக விளங்கி வருகிறது.

இவரும் தம்முடைய குருநாதர் காட்டிய பாதையிலேயே தாமும் சைவப்பணி புரிந்து எம்முடைய நாட்டிலே சைவமும் தமிழும் தழைத்தோங்கிடத் தம்மாலான முழுமுயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இப்போது இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலே அமைந்திருக்கும் குருமூர்த்த ஆலயத்தில் அதாவது முதலாவது குருமஹா சந்நிதானம் அவர்களது சமாதியில் எழுந்தருளியிருக்கின்ற மூலமூர்த்தியாகிய சிவலிங்கத்திற்கு மூன்றுகாலப் பூசை முறையாக நிகழ்ந்து வருகின்றது. இதற்கு அணித்தாக ஸ்தாபகர் சிலையும் அருகாமையில் வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் இள வயதினரிடையே ஆஸ்திகம் நிலவவேண்டும்; அவர்கள் தமது நெற்றியிலே திருநீறு தரிக்கவேண்டும்; தேவாரத் திருமுறையைப் பண்ணோடு ஓதவேண்டும் முதலாய தெய்வீகப் பணிகளைச் சிரமேற்கொண்டு வெள்ளிக்கிழமைதோறும் சமய தீட்சை வைக்கும் புண்ணிய கைங்கரியம் ஒழுங்காக நடைபெற்று வருகின்றது. தினசரி திருமுறைப் பாராயணம் செய்யப்படுகின்றது. விசேட புண்ணிய தினங்களிலும், விரத நாள்களிலும், பண்டிகை, விழாக்கள் நிகழும் புனித

நாள்களிலும் இந்த ஆதீனத்தில் மாகேஸ்வர பூசையும் (அன்னதா[illegible] நடைபெறுகின்றது.

ஆதீனத்திற்கு வருகைதருகின்ற அடியார்களுக்குத் தாகந்தீர குளிர்பானங்களும் வழங்கி வருவதோடு, அவர்கள் உண்டு பசியாறிச் செல்வதற்கு மதியவேளை உணவும் திருப்தியான முறையில் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்படியாக இந்த ஆதீனம் தம்மால் முடிந்தளவு சைவசமயம் வளர அறப்பணியாற்றி வருகின்றது. இந்த அறப்பணியானது அரும்பணியாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணியாக அமைய சைவமக்கள் ஒவ்வொருவரும் பங்கேற்கவேண்டும். அத்துடன் இது எங்களுடைய ஆதீனம். நாங்கள் வெளிமாவட்டங்களில், வெளி நாடுகளில் இருந்துகொண்டுங்கூட இதன் வளர்ச்சிக்கு உதவவேண்டு மென நினைத்துச் செயற்படுவது ஒவ்வொரு சைவ சமயத்தவரதும் தலையாய கடனாகும்.

எம்முடைய மூதாதையர் கட்டிக்காத்த சைவப் பாரம்பரியமும், சைவ ஒழுக்கமும், சைவப் பண்பாடும் நிச்சயம் பேணப்பட வேண்டும். யாழ்ப்பாண மக்கள் மட்டுமல்ல, உலகத்தின் எப் பாகங்களிலும் வசிக்கின்ற சைவத் தமிழ்மக்கள் ஒன்றாக அணிதிரண்டு நல்லை ஆதீனப் பணிக்கு இயன்றவரையில் உதவி ஒத்தாசை வழங்குவது நன்றிக் கடனாகும். ஆகவே சைவப் பணியோடு அனைவரினது உதவியும் சேர்ந்து நல்லை ஆதீனம் செழிப்புற்றோங்க வகை செய்வோமாக.

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர் - ☏ : 2223586